## அவசரக் கூட்டம்

கூட்ட எண் – 20 / 2019 திருத்தணி நகராட்சி,
நாள்: 12.11.2019

நிகழும் விகாரி ஆண்டு, ஐப்பசி – 26, திருவள்ளுவர் ஆண்டு 2050 நாள் 12.11.2019 செவ்வாய் கிழமை பிற்பகல் 5.00 மணிக்கு திருத்தணி நகராட்சி அலுவலகத்தில் சாதாரணக் கூட்டத்தில் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெறும் கூட்ட நடவடிக்கைகள்.

தனி அலுவலர் (ம) ஆணையர்
திருத்தணி நகராட்சி.

**பொருள் எண்– 1**

இயற்கை இடர்பாடுகள் திட்டத்தின் கீழ், இந்நகராட்சியில் கீழ் கண்ட பணிகள் மேற்கொள்ள ரூ.200.00 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது, கீழ்கண்ட பணிகளுக்கு உரிய நிர்வாக அனுமதி பெற விரிவான திட்ட அறிக்கை தயாரித்து பேரரணை அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | சாலையின் நீளம் (கிலோ மீட்டர்) | மதிப்பீட்டு தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | வார்டு எண்.13,சன்னதி தெரு, வார்டு எண்.13,மேட்டுத் தெரு, வார்டு எண்.15, நரசிம்ம சாமி கோயில் தெரு,வார்டு எண்.11, எம்.ஜி.ஆர் நகர், வார்டு எண்.2,காந்தி ரோடு, வார்டு எண்.6, ஆறுமுகசாமி கோயில் தெரு, வார்டு எண்.5,முருகப்பா நகர், வார்டு எண்.1, சுப்பிரமணிய நகர், வார்டு எண்.1,பாரதிதாசன் தெரு, வார்டு எண்.14, நகராட்சி அலுவலக வளாகம், வார்டு எண்.1, கம்பர் தெரு, வார்டு எண்.1, ஏரிக்கரை தெரு, வார்டு எண்.6, பெரியார் நகர், நகராட்சி தலைமை நீரேற்று நிலையம் அருங்குளம், வார்டு எண்.9, டி–புதூர் தெரு, வார்டு எண்.21, குமார குப்பம், வார்டு எண்.20, அமிர்தாபுரம், வார்டு எண்.21, அருந்ததியர் காலனி, வார்டு எண்.20, பஜார் தெரு, வார்டு எண்.15, பஜனை கோயில் தெரு, வார்டு எண்.15, கஸ்தூரி பாய் தெரு மற்றும் வார்டு எண்.15, கம்மவாரி மடம் தெரு ஆகிய இடங்களில் சிமெண்டு சாலை அமைத்தல் பணி. | 4.30 | 200.00 |
| | மொத்தம் | 4.30 | 200.00 |

அலுவலக குறிப்பு : -

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. நிர்வாக அனுமதி பெற உரிய பேரரணை அனுப்ப மன்றம் அனுமதி வழங்கலாம்.
   (ந.க.எண்.191/2019/இ1)

**பொருள் எண்– 2**

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம் மற்றும் நகரம், புல எண்.265/11–ல் ‘பாறை – புறம்போக்கு’ என வகைப்பாடு கொண்ட 1.86.0 எக்டேர் நிலத்தை புதிய பேருந்து நிலையம் அமைக்க திருத்தணி நகராட்சிக்கு நில கிரையம் இன்றி நில உரிமை மாற்றம் செய்து வருவாய் துறை, நில முடிவு அலகு, நி.மு 5(2) பிரிவு, அரசாணை (நிலை) எண்.180 நாள்.19.05.2017–ல் வெளியிடப்பட்டது. அரசாணையின் படி மேற்கண்ட இடம் வருவாய் பதிவேட்டில் திருத்தணி நகராட்சி பெயரில் நில உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை –28 ஆகியோர்களின் ஆய்வு கூட்ட நாள். 11.10.2019–ந் தேதிய அன்று மேற்படி இடத்தில் புதிய பேருந்து நிலையம் அமைக்க ஏதுவாக விரிவான திட்ட அறிக்கை கீழ் கண்டவாறு தயாரித்து வழஙக அறிவுரை வழஙகப்பட்டது, அதன் படி புதிய பேருந்துநிலையம் அமைக்க ஏதுவாக விரிவான திட்ட அறிக்கைக்கு 1) Prepration of Technical Feasibility Report as per TNIDB guidline and 2) Shall conduct Topographical Survey, Traffic Volume Survey, Field Survey including Mapping, Designing, and Project Estimates with respect to Structural drawings as per structural design based on the soil test தயாரிக்கும் பணிக்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.7.70 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு : -**</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. செலவினத்தை அனுமதிக்கலாம்.
   (ந.க.எண்.925/2018/இ1)

**பொருள் எண்– 3**

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம் மற்றும் நகரம், புல எண்.265/11–ல் ‘பாறை – புறம்போக்கு’ என வகைப்பாடு கொண்ட 1.86.0 எக்டேர் நிலத்தை புதிய பேருந்து நிலையம் அமைக்க திருத்தணி நகராட்சிக்கு நில கிரையம் இன்றி நில உரிமை மாற்றம் செய்து வருவாய் துறை, நில முடிவு அலகு, நி.மு 5(2) பிரிவு, அரசாணை (நிலை) எண்.180 நாள்.19.05.2017–ல் வெளியிடப்பட்டது. அரசாணையின் படி மேற்கண்ட இடம் வருவாய் பதிவேட்டில் திருத்தணி நகராட்சி பெயரில் நில உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை –28 ஆகியோர்களின் ஆய்வு கூட்ட நாள். 11.10.2019–ந் தேதிய அன்று மேற்படி இடத்தில் புதிய பேருந்து நிலையம் அமைக்க ஏதுவாக விரிவான திட்ட அறிக்கை கீழ் கண்டவாறு தயாரித்து வழஙக அறிவுரை வழஙகப்பட்டது, அதன் படி புதிய பேருந்துநிலையம் அமைக்க ஏதுவாக விரிவான திட்ட அறிக்கைக்கு Preparation of Enviromental Impact Assessment, Socila Impact Assessment, Market, Assessment and Demand Assessment and Indenting the gaps for the proposed bus terminal தயாரிக்கும் பணிக்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.8.55 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : -**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. செலவினத்தை அனுமதிக்கலாம்.
   (ந.க.எண்.925/2018/இ1)

**பொருள் எண்– 4**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கும் வாகனம் எண்.TN 20 CA 9016, ஹட்ராலிக்கில் ஏற்ப்பட்டுள்ள பழுது, பிளாட் பராம் மற்றும் கீரிஸ் பேக்கிங் ஆகியவைகள் சரி செய்து தரக் கோரி ஓட்டுநர்.திரு.குப்பன் அவர்கள் கடிதம் அளித்துள்ளார், மேற்படி வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்யதால் மட்டுமே வாகனத்தினை இயக்க இயலும், பொது சுகாதார பணி என்பதாலும் வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்தால் மட்டுமே நகராட்சி பகுதியில் பொது சுகாதரப்பணிகள் மேற்கொள்ள இயலும் என்பதாலும் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் அனுமதியினை எதிர் நோக்கி 12.11.2019 இன்று உள்ளூர் விலைப்புள்ளி கோரியமைக்கும், பழுது நீக்கும் பணிக்கான செலவினத் தொகை ரூ.30,000/–க்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : -**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் அனுமதியினை எதிர் நோக்கி உள்ளூர் விலைப்புள்ளி கோரியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.
3. வரப்பெற்ற மூன்று உள்ளூர் விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீ வெங்கடேஷ்வரா ஆட்டோ (ம) இன்ஜினியரிங் ஒர்க்ஸ், திருத்தணி என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.
4. செலவினத்தை அனுமதிக்கலாம்.
   (ந.க.எண்.191/2019/இ1)

**பொருள் எண்– 5**

Municipal Administration and Water Supply (WS1) Department G. O. (Ms) No.143 Dated : 01.11.2019–ல் இந்நகராட்சிக்கு குடிநீர் அபிவிருத்தி திட்டத்திற்கான தொகை ரூ.109.68 கோடியில் பணிகள் மேற்கொள்ள அரசாணை வெளியிடப்பட்டுள்ளதினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : -**

அரசாணையினை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.1167/2018/இ1)

**தனி அலுவலர் (ம) ஆணையர்**
**திருத்தணி நகராட்சி.**

**அவசரக் கூட்டம்**

**கூட்ட எண் – 21 / 2019** **திருத்தணி நகராட்சி,**
**நாள்: 21.11.2019**

நிகழும் விகாரி ஆண்டு, கார்த்திகை – 5, திருவள்ளுவர் ஆண்டு 2050 நாள் 21.11.2019 வியாழக் கிழமை காலை 11.00 மணிக்கு திருத்தணி நகராட்சி அலுவலகத்தில் சாதாரணக் கூட்டத்தில் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெறும் கூட்ட நடவடிக்கைகள்.

**தனி அலுவலர் (ம) ஆணையர்**
**திருத்தணி நகராட்சி.**

**பொருள் எண்– 1**

அரசாணை எண்.(MS) 150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA.IV) துறை, நாள்.19.11.19–ன்படியும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை – 28 அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1 நாள்.20.11.2019–ல் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளின்படியும், அரசாணை எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.26.07.2018–ன்படி 01.04.2018–ந் தேதி முதல் சொத்து வரி பொது சீராய்வு (Revision of Property Tax) மூலம் உயர்த்தப்பட்ட சொத்து வரி உயர்வினையும், சொத்து வரி விதிப்புக்கான மண்டல மதிப்பு (Zonnal Rate's) 01.04.2018 முதல் உயர்த்தப்பட்டதையும் மற்றும் 01.10.2017–ம் தேதி முதல் சொத்து வரி மறு சீரமைப்பு (Remeasurement) செய்து உயர்த்தப்பட்டதையும் நிறுத்தி வைக்கத் தெரிவிக்கப்பட்டுள்ளதை, மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : -**

1. அரசாணையினை மன்றம் பதிவு செய்யலாம்.
2. மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1607/அ1/2018)

**பொருள் எண்– 2**

திருத்தணி நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் பணிபுரியும் பணியாளர்களுக்கு மழைக்காலங்களில் திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகளை மேற்கொள்ளும் பொழுது தேவையான மழை கோட் (Raicoat) வாங்கி வழங்கிவுடம், அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :—</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். ந.க.எண். 2048 /2019 /எச்1)

**பொருள் எண்— 3**

திருத்தணி நகராட்சியில் அனைத்து பிரிவுகளில் பணிபுரியும் பணியாளர்களில் சீருடை பெற தகுதியான பணியாளர்களுக்கு 2019—20ம் ஆண்டிற்கு வழங்க வேண்டிய சீருடையினை, அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடமிருந்து வாங்கி வழங்கிவுடம் மற்றும் அதற்கான தையற்கூலிக்கு உண்டாகும் உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :—</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 2059 /2019 /எச்1)

**தனி அலுவலர் (ம) ஆணையர்**
**திருத்தணி நகராட்சி.**